DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 16/2020**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | முகமது அப்துல்லா | Caste: | |
| Father's/Husband Name: | காசிம் | Calling: | விவசாயம் |
| Village: | கிழக்கு தெரு,பனைக்குளம் | Religion: | |
| Taluk: | இராமநாதபுரம் | Age: | 56 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 06.03.2026

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் தாலுகா பனைக்குளம் கிராமத்தில் கிழக்கு தெருவில் வசித்து வருகிறேன். எனக்கு சாட்சி முதுகுளத்தூர் தேவேந்திரர் நகரை சேர்ந்த முத்து மகன் சேகரை தெரியும். அ.சா.1 காளிஸ்வரனை தெரியாது. அ.சா.1 இராமநாதபுரம் நகர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டடப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டு கையெழுத்துகளில் எதுவும் என்னுடையது அல்ல.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:27 +0530

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 21.04.2017 ம் தேதி 4.00 மணியளவில் நானும் சேகரும் இராமநாதபுரம் மல்லிகை நகர் அன்பு டிவிஎஸ் முன்பு நின்றுகொண்டிருந்தோம் என்றும் அப்போது இராமநாதபுரம் உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் இராமநாதபுரம் நகர் காவல்நிலைய கு.எண். 176/2017 என்ற வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், வரைபடம் தயார் செய்தார் என்றும் பார்வை மகசரில் நானும் சேகரும் கையெழுத்து செய்தோம் என்றும் கடந்த 21.04.2017 ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லிவிட்டு தற்போது புகார்தாரரை தெரியாது என்றும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.06 15:28:31 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)